



சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்களின் ஆலோசனை கூட்டம் மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் ஏற்பாட்டில் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் திருமதி. சி. சியாமளா, துணைத் தலைவர் மோ. பாலசசந்தர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றாசு சிறப்புரையாற்றி வழக்கறிஞர்களுக்கு உறுப்பினர் அட்டை, தீபஒளி திருநாளை முன்னிட்டு சீருடை மற்றும் இனிப்பு வழங்கினார். இதில் வழக்கறிஞர் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று (17.10.2025) சென்னை, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி இன்னசென்ட் திவ்யா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### சென்னை மாநகராட்சி சார்பில் வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு,

# முன்னேற்பாட்டுப் பணிகள் - அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்!

## மேயர் பிரியா தலைமையில் நடைபெற்றது!

சென்னை,அக்.18-

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீர்வளத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகர காவல்துறை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தமிழ்நாடு மீன்வளத்துறை, ஆவின், தென்னக இரயில்வே துறை, மாநகரப் போக்குவரத்துக் கழகம், உணவுத் துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை வானிலை ஆய்வு மையம் உள்ளிட்ட தொடர்புடைய சேவைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் நேற்று (17.10.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மேயர் பேசும்போது தெரிவித்ததாவது :-

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து துரிதமாக மேற்கொள்ள வேண்டும். மழைக்காலத்திற்கான நிவாரண மையங்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார்நிலையில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். உணவு தயாரிக்கும் கூடங்கள் அனைத்தையும் அலுவலர்கள் ஆய்வு செய்து தயார்நிலையில் வைத்திட வேண்டும். மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் மண் சேகரிப்புத் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாகவும் இப்பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட இடங்களில் தனிக்கவனம் செலுத்தி மழைநீர் தேங்காத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியில் கால்வாய்களில் தூர்வாருதல், தடுப்புச்சுவர் அமைத்தல், தடுப்புச்சுவரை உயர்த்திக் கட்டுதல், சுவர் மேல்பகுதியில் கம்பிவேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கால்வாய்களில் மழைநீர் தடையின்றி செல்வதை உறுதி செய்திட வேண்டும். மழைக்காலங்களில் பணிகள் நடைபெறும் இடங்களில் உரிய தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு உணவுப் பொருள் தடையின்றி கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆவின் பால் விநியோகம் தடையின்றி மக்களுக்கு கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மின் இணைப்புப் பெட்டிகள் அமைந்துள்ள இடங்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டும்.

மழைக்காலங்களில் விழும் நிலையில் உள்ள மரங்களை அகற்றுவதற்கு உரிய உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் தயார் நிலையில் இருந்திட வேண்டும். ஆபத்தான நிலையில் உள்ள மரக்கிளைகளை அகற்றும் பணிகளைத் தொடர்ந்து விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

தற்போது ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையில் 150 இணைப்புகளுடன் 1913 உதவி எண் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் ஒவ்வொரு சுழற்சி முறையிலும் தலா 60 நபர்கள் வீதம் 3 சுழற்சி முறைகளில் 180 நபர்கள் பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் வரப்பெறும் புகார்களை கண்காணித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள 25 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களின் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார அலுவலகங்களில் தலா ஒரு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் என 3 வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் கூடுதல் பணியாளர்களை நியமித்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, தீயணைப்புத்துறை மற்றும் காவல்துறை உள்ளிட்ட சேவைத் துறைகள் ஒருங்கிணைந்து பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குளங்கள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளிலும் சீரமைப்புப் பணிகள், புதிய குளங்கள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு அதிகளவில் நீர் சேமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என மேயர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), ம.பிரதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), எச். ஆர்.கௌஷிக், (மத்தியம்), அஃதாப் ரசூல், (தெற்கு) மற்றும் சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# கிருஷ்ணாபுரம் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படும்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!



**சென்னை, அக்.18-**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டிடத் தரப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் நேற்று (17.10.2025) சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.**

அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், பள்ளிகொண்டா கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டில், கீழ் கிருஷ்ணாபுரம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பழுதடைந்த கீழ் கிருஷ்ணாபுரம் துணை சுகாதார நிலையக் கட்டிடம் இடிக்கப்பட்டுவிட்டதால், தற்சமயம் துணை சுகாதார நிலையம் பஞ்சாயத்து அலுவலகத்தில் இயங்கி வருகிறது. எனவே, விரைந்து புதிய கட்டிடம் கட்டி முடிப்பதற்கு இன்னும் ஒரு சில நாட்களிலேயே அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணிகள் முடித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அணைக்கட்டு தொகுதியைப் பொறுத்தவரை ஏற்கனவே பல்வேறு புதிய மருத்துவ கட்டமைப்புகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு முழுவதிலும் இதுபோன்று துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சார்ந்த 2000க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் வாடகை கட்டிடங்களிலும், பயன்படுத்த முடியாத நிலையிலுமாக இருந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 1500க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற கட்டிடங்களும் படிப்படியாக கட்டித் தரப்பட இருக்கிறது.

வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாளாக இருந்து கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் கட்டப்பட்ட பெரும்பாலான பொதுப்பணித்துறை கட்டிடங்களில் இதுபோன்ற கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், குடிநீர் பிரதான குழாய்கள் போன்ற பணிகளில் அதிக கவனம் செலுத்தாத நிலை இருந்து வந்தது.

இந்த ஆட்சியில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொன்றாக நிவர்த்தி செய்து வருகின்றோம். அதற்கு சிறந்த உதாரணம் நாமக்கல் மற்றும் நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகும். விரைவில் வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனைக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தரப்படும்.

**புவனகிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு**

புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், பரதூர் கிராமத்தில் பழுதடைந்துள்ள துணை சுகாதார நிலையம் குறித்து மாவட்ட சுகாதார அலுவலரை அனுப்பி அந்த கட்டிடத்தின் பயன்பாடு குறித்த விளக்கங்களைப் பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு**

மருத்துவத் துறையின் உச்சபட்ச ஒரு அமைப்பே மருத்துவக் கல்லூரி மருத்துவமனைதான். அதுவே விக்கிரவாண்டியில் அமைந்திருக்கிறது. அதிலேயே அனைத்து உயர்சிறப்பு வசதிகள் (Super Speciality Services) இருக்கின்றன. இருப்பினும் மழைநீர் தேங்கும் பிரச்சினைக்கு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் எடுத்து சொல்லி, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

### நொளம்பூர் வே.ராஜன். அயப்பாக்கம் துரை. வீரமணி முன்னிலை!

# மதுரவாயல் தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு - கழக நிர்வாகிகளுக்குப் பாராட்டு!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் விழா!

சென்னை, அக்.18-

முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்ற தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்ட பாக பொறுப்பாளர்கள், பாக நிலை முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்க்களுக்கு பாராட்டு தெரிவித்து சிறப்பு செய்யும் நிகழ்ச்சி 16.10.2025 அன்று மேட்டுக்குப்பம், எஸ்.பி.பி. கார்டனில் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. தலைமையிலும், மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தொகுதி மேற்பார்வையாளர் பி.டி. பாண்டிசெல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். அருணாசலம், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் இராமாபுரம் வ.செல்வகுமார், எம்.சி., வீர.கனிமொழி, பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி., கே.ராஜீ, எம்.சி., ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, எம்.ஏ. செந்தில்சுரேஷ், ஆ.மாலினி எம்.சி., ம.உதயகுமார், என். ஜெயச்சந்திரன், ஏ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர்,

ப.கிரிஜா, என்.ரவி, மாவட்ட அமைப்பாளர்கள் வி.ராஜேஷ், அ.விஜயபாலா, கே.குமரேசன், எஸ். பி.அருள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் செ.ரவி, ச.சங்கர் கணேஷ்,எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் எஸ். ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி. சுந்தர், அ.மோசஸ், ஜெ. பாஸ்கரன் (பொறுப்பாளர்), தி.சார்லஸ், ஆ.செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம். கே.பி.அண்ணாதாசன், எம். எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன்,

எம்.இ.ஸ்டாலின்,எம்.சி., எம்.ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ், எம்.சி., ஹேமலதா கணபதி, எம்.சி., சாந்தி ராமலிங்கம், எம்.சி., ரமணி மாதவன், எம்.சி. மற்றும் மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA)க்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.





உலக தரத்தில் விளையாட்டு வீரர்களை, உருவாக்கிட வேண்டும் என்ற உன்னத முனைப்பில் அயராது உழைத்திடும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் மாவட்ட பள்ளி கல்வித்துறை சார்பில், கரூர் வருவாய் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவச் செல்வங்களுக்கு, கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., பரிசு வழங்கி வாழ்த்தினார்.





கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில், திருக்கோவிலூர் சந்தப்பேட்டை எம்.ஜெ.மஹாலில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிளை கழக செயலாளர்கள் பாக முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்களுக்கான சிறப்பு செயற்குழு கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது, இக்கூட்டத்தில் ச.அ.பெருநற்கிள்ளி, வசந்தம் க.வேலுசாமி ஆகியோர் ஆலோசனை வழங்கினர். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.